# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 27.07.2018-ம் தேதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01) :-** ஆற்காடு நகராட்சியில் கீழ்கண்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்களை பொது மக்கள் பயன்படுத்திவந்தனர். தற்சமயம் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தின் மூலம் வீடுகளில் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாலும் இக்கழிப்பிடங்கள் தற்போது பொது மக்களின் பயன்பாட்டில் இல்லாமையாலும் கட்டிடம் உபயோகமற்ற தன்மையில் எந்தநேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் இந்த சமுதாய கழிப்பிடங்களை உடனே இடிக்க வேலூர் நகராட்சிகளின் மண்டல இயக்குநரகம் செயற்பொறியாளர் அவர்களின் ஆய்வரிக்கை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் |
|---|---|---|
| 1 | 04 | அமின்பீரான் தர்கா தெரு (நகராட்சி துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு அருகில்) |
| 2 | 08 | மத்பர்கான்புரா தெரு, (போத்தன்காலனி அருகில்) |
| 3 | 11 | நவாத்திவாடி, (சரஸ்வதி நிதியுதவி துவக்கப்பள்ளி அருகில்) |

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) இந்நகராட்சியின் 04, 08, 11 ஆகிய வார்டுகளில் உள்ள மூன்று சமுதாய கழிப்பிடங்கள் தற்போது பொது மக்களின் பயன்பாட்டில் இல்லாமையால் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருப்பதால் வேலூர் நகராட்சிகளின் மண்டல இயக்குநரகம் செயற்பொறியாளர் அவர்களின் ஆய்வறிக்கை பெற்று இடிக்க நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் அனுமதி வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.02) :-** இந்நகராட்சி சார்பாக பிரதம மந்திரி ராஷ்டிரியஸ் விஸ்திய சுரக்ஷா மிஷன் என்ற நிலையில் உள்ள 30 வார்டுகளில் உள்ள குடும்பங்களின் விவிரம் பூர்த்தி செய்து தர துணை இயக்குனர், சுகதாரப் பணிகள், வேலூர் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன்படி வெவ்வொரு வார்டுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் விபரம் அடங்கிய புத்தகம் தயாரித்து சர்வே செய்ய வேண்டியுள்ளதினால், புத்தகம் தயாரிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.10,000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.03) :-** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் உரம் தயாரிக்கும் பணிக்கு EMI Solution தேவைப்படுகின்றது. மேற்படி EMI Solution 500 லிட்டர் வாங்கிகொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4,75,000/– அனுமதி பெற மன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

அ.கு :– 1) நகரில் அனுமதிக்கப்பட்டுள்ள Onside compost மற்றும் MCC Compost-சேகரிக்கும் கழிவுகள் உரம் தயாரிக்க அவசியம் அவசியத்தால் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.04) :-** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகரில் உற்பத்தியாகும் ஈக்களை கட்டுப்படுத்தும் மார்கெட் மற்றும் மாங்காய் மண்டி கடைகளில் போன்ற இடங்களில் ஈக்கள் கட்டுப்படுத்த மருந்து தெளிக்க வேண்டியுள்ளதினாலும் கொசு கட்டுப்படுத்தவும் ரெடிமிக்ஸ் மருந்து தேவைப்படுவதினால் 600 லிட்டர் பூச்சி போன்றவை இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4,20,000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) தற்போது மாம்பழம் சீசன் என்பதனால் ஈக்கள் கட்டுப்படுத்த வேண்டி வாங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.05) :-** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் பஸ்நிலையம் மார்க்கெட் பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் அலுவலக பகுதிகளில் உருவாகும் துர்நாற்றம் போக்கவும், தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கிருமி நாசினியாக பயன்படுத்தப்படும் லேமன் கிரான் ஆரிப் (மனை Crrts Oil) தேவைப்படுவதினால் 150 லிட்டர் வாங்கிகொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவு ரூ.4,20,000/– க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமி நாசினியாக பயன்படுத்த வேண்டியுள்ளதினால் வாங்கிக் கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1408/2018/எப்1

**பொருள் எண்.06) :-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN23L 1039 மினி லாரி பிளாட்பாரம் பழுது ஏற்பட்டுள்ளதால் இதனை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நிவர்த்தி செய்ய 20.06.2018ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க மன்றப்பொருள் எண்.115 நாள்.18.06.2018ம் நாளில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்க வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | The Modern auto diesel works, Vellore | 74,900/– |
| 2 | Sri Balaji Industrials, Vellore | 75,500/– |

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்கு பட்டியலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வ.எண்.1ல் காணும் The Modern auto diesel works, Vellore என்பவரின் ஏற்று வேலைக்கான உத்திரவு வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.22/2018/எச்1

**பொருள்எண். 07:-** ஆற்காடு நகராட்சியில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி, சாம்பார் சாதம், தயிர்சாதம் அதற்கான இரசீது புத்தகங்கள் உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்து கொள்ள கீழ்கண்ட விலைப்புள்ளிகள் அச்சகத்தில் இருந்து வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | அச்சகத்தின் பெயர் | ரூ. |
|---|---|---|
| 1 | மணி பிரஸ், 123, அண்ணாசாலை, ஆற்காடு | 44/– |
| 2 | ஜெயம் ஆப்செட் பிரிண்டடெர்ஸ், 22/12, ஆரணிரோடு, ஆற்காடு. | 40/– |
| 3 | மணிமேகலை ஆப்செட், 45/31, ஜீவானந்தம் சாலை, ஆற்காடு | 42/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ், ஆற்காடு என்பவர் அளித்துள்ள ரூ.40/– குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** அவசர அவசியத்தின் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜெயம் ஆப்செட் பிரிண்டார்ஸ், ஆற்காடு என்பவருக்கு உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1090/2015/சி2

**பொருள்எண். 08:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள குடிநிர் பகீர்மானக் குழாய்கள் மற்றும் பம்பிங் மெயின் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் பழுதுபராமரிப்பு பணிக்கு 20.06.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| 1 | M/s.K. ராஜாராம் & கோ | 0.26% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | B. ஹயாதி பீ | 0.63% மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.K. ராஜாராம் & கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.26% குறைவு குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 09:-** இந்நகராட்சியின் குத்தகை இனங்களை 12ல் 3 குத்தகை இனங்கள் பலமுறை ஏலம் கோரியும் எவரும் ஏலம் கோர முன்வராததால் 01.04.2018 முதல் இலாகா மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

1) கோழி, ஆடு மற்றும் மாடு விற்பனை செய்பவர்களிடம் தங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம்.

2) பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன நிறுத்தம் இடத்தில் வாகனம் பாதுகாப்பு பணி வசூல் உரிமம்.
3) அண்ணசாலை மார்க்கெட் பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் தங்கள் வசூலிக்கும் உரிமம்.

மேற்படி, 3 குத்தகை இனங்களை துறை மூலம் வசூலிப்பதால் பலசிரமங்கள் உள்ளதால் மீளவும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
2) தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்யலாம்.
3) இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
ந.க.எண்.1924/2014/அ1

**பொருள்எண். 10:-** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19ல் உள்ள Bio Gas plant-க்கான ஆண்டு பராமரிப்பு பணி 10.08.2018 அன்றுடன் முடிவடைய உள்ளதால் தொடர்ந்து Bio Gas plant-க்கு 11.08.2018 முதல் ஓர் ஆண்டுக்கு (365 நாட்கள்) Operation & Maintenance ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும், நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 11:-** அரசாணை நிலை எண்.39/MA & WS (WS2) துறை நாள்.17.04.2018–ன் படி தற்போது வழங்கப்பட்டு வரும் CWSS குடிநீர் 1000 லிட்டருக்கான விலை ரூ.4.50ல் இருந்து 01.12.2017 முதல் (2017–18) நிதி ஆண்டில் இருந்து குடிநீர் 1000 லிட்டருக்கான விலை ரூ.9.00/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் அடுத்தடுத்து வரும் நிதி ஆண்டுகளுக்கு 2017–18 முதல் 2021–22 வரை இடைப்பட்ட ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் 5% கூடுதலாக குடிநீருக்கான விலையினை 9.00–ல் இருந்து உயர்த்தி நிர்ணயத்திட உத்தரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம் (ம) அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ள குடிநீர் நிலுவை கேட்பினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்துவதற்கும் தொடர்ந்து இனி வரும் காலங்களில் மேற்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ள விலை விகிதங்கள் அடிப்படையில் தொகையினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்துவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) இதற்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 12:-** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, ஜக்அக்ராஹரம் தெருவில் அமைந்துள்ள வரதராஜர் பெருமாள் கோயில் பிரம்மோற்சவ முக்கிய நிகழ்வான திருத்தேர் நகர்வலம் நடைபெற உள்ளதால் திருத்தேர் வீதிஉலா செல்லும் சாலைகள் அமீன்பிரான் தெரு, கலவை ரோடு மற்றும் தேர் செல்லும் சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்திடவும் சிமெண்ட் கான்கிரிட் பேட்ச் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.55000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அ.கு:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும், நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண். 13:-** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, அமின்பீரான் தெரு மற்றும் வார்டு எண். 8, மாத்பர்கான்புரா தெரு ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு உபயோகமற்ற நிலையில் உள்ள பொது கழிப்பிடங்களை, இடித்து அப்புறப்படுத்தி ஜெ.சி.பி இயந்திரம் மூலம் சமன்செய்து சீர்படுத்துதல் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.65000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும், நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண். 14:-** இந்நகரமன்ற தீர்மான எண்.133, நாள்.18.06.2018ல் அனுமதியளிக்கப்பட்டதினை தொடர்ந்து இப்பணிக்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தில் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | என். எழிலன், ஒப்பந்ததாரர் | ரூ.10,700/– |
| 2 | பி.ஹயாதி பீ, ஒப்பந்ததாரர் | ரூ. 9,800/– |
| 3 | ஓம் சக்தி எலக்ட்ரிகல் & ரீவைண்டிங் ஒர்க்ஸ் | ரூ.10,750/– |

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருமதி.எஸ்.ஹயாதி பீ ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண். 15:-** மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ2/857/2018 நாள்.14.06.2018ன் படி MP Fund 2018-19-ன் கீழ் ரூ.8.70 லட்சத்திற்கு கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | ஆற்காடு அரசு பெண்கள் மேல்நிலை பள்ளிக்கு 50 செட் டெஸ்க் மற்றும் பென்ச் வழங்குதல் | ரூ.4.35 லட்சம் |
| 2 | ஆற்கழடு அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளிக்கு 50 செட் டெஸ்க் மற்றும் பென்ச் வழங்குதல் | ரூ.4.35 லட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.8.70 லட்சம்** |

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 16:-** மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ2/857/2018 நாள்.05.07.2018ன் படி MP Fund உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2018-19-ம் ஆண்டின் கீழ் ஆற்காடு வேலூர் மெயின்ரோட்டில் அண்ணாசாலை அருகில் (கண்ணன் பூங்கா எதிரில்) பேருந்து நிழற்குடம் அமைத்தல் பணியினை மேற்கொள்ள ரூ. 8.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 17:-** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 அண்ணா நகர் (ARM திருமணமண்டபம் அருகில்) உள்ள பகுதியில் மறைநீர் வடிகால்வாய் இல்லாததால் பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட இடத்தில் புதிதாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.2.30 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2 மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 18:-** மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ2/1017/2017 நாள்.21.05.2018ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18-ன் கீழ் ரூ.18.00 லட்சத்திற்கு கீழ்கண்ட மூன்று பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வார்டு எண்.23, தண்டுகாரன் தெருவில் பூங்கா அமைத்தல் | ரூ.7.00 லட்சம் |
| 2 | வார்டு எண்.30, ஏரிக்கரை தெருவில் பூங்கா அமைத்தல் | ரூ.7.00 லட்சம் |
| 3 | வேலூர் மெயின்ரோடு அண்ணாசிலை அருகில் பயனியர் நிழற்குடை அமைத்தல் பணி | ரூ.4.00 லட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.18.00 லட்சம்** |

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 19:-** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, கோட்டை மேட்டுத் தெருவில் உள்ள பொதுகழிப்பிடம் பழுதடைந்து சேதமடைந்து உள்ளதால் மேற்கண்ட கழிப்பிடத்தில் தரை டைல்ஸ் மற்றும் கதவுகள் மாற்றியமைத்தல், தண்ணீர் மற்றும் மின்சார வசதி மேற்கொள்ளுதல் மற்றும் இதர பழுது பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.4.30 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணிகள் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 20:-** வேலூார் மண்டலத்தில் உள்ள ஆற்காடு நகராட்சியில் வசிக்கும் 55917 பொதுமக்களுக்கு நகராட்சியில் நாள்தோறும் 54.80 இலட்சம் குடிநீர் இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வீதம் , நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 98 லிட்டர் வீதம் தண்ணீர் கீழ்க்கண்ட நீராதாரங்களின் அடிப்படையில் பெறப்பட்டு வழங்கப்படுவதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நீராதார இருப்பிடம் | மேல்நிலைத் தொட்டி அமைவிடம் | மேல்நிலைத் தொட்டி கொள்ளளவு (ல.லி) | குடிநீர் விநியோகிக்கப்படும் தண்ணீர் மற்றும் கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 0 | 5 |
| 1 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | கே.எம்.எல் பூங்கா | 2.75 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| 2 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | அண்ணா நகர் | 5.00 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| 3 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | கஸ்பா | 3.00 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| 4 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | பூபதி நகர் | 4.00 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| 5 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | தோப்புகானா | 3.00 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| 6 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி – I | 2.50 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| 7 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி – II | 4.00 | 98லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2½ மணி நேரம் |
| | | **மொத்தம்** | **24.25** | |

மேலும் ஆற்காடு நகராட்சியில் மொத்தமுள்ள 55917 பொதுமக்களுக்கு 54.80 இலட்சம் மொத்தம் வழங்கப்படும் தண்ணீரின் அளவு 14640 சொத்து வரிவிதிப்புதாரர்களில் 7388 எண்கள் குடியிருப்புகளுக்கும் 164 எண்கள் வணிக உபயோகத்திற்கு வீட்டிணைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகத்தினை Flow Control Valve மற்றும் Metering System-த்தின் அடிப்படையில் நகராட்சி மூலம் Uniform Water Supply Distribution செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4363 எண்கள் சொத்துவரி குடியிருப்புகளுக்கும், 1941 வணிக உபயோக கட்டிடங்களுக்கும் மொத்த குடிநீர் இணைப்புகள் 6304 எண்கள் வழங்கும் பணிக்கு டுபிட்கோ நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக ரூ.211.00 இலட்சம் பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க. எண்.13277/2018/WS1 நாள்.03.07.2018–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க. எண். 13277/2017/குவ1, நாள்: 09.07.2018 தேதிய கடிதத்தில் 29.06.2018 ஆம் தேதியில் நடைபெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் பொதுமக்களுக்கு 24 x 7 அடிப்படையில் சீரான குடிநீர் விநியோகம் உரிய அழுத்தத்தில் கடைமடைப்பகுதியில் உள்ளவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், இதற்கான நீராதாரங்கள் சரியான முறையில்

District Metering Area (D M A) –ன்படி வழக்கத்தினை ஆற்காடு நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி பெற இருப்பதற்கு 2018–2019–ம் ஆண்டு TWAD விலை விகிதப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ரூ.218.00 இலட்சம் ஆகும். வித்தியாசத்தொகையான ரூ.7.00 இலட்சம் என்பது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.20% அதிகமாக உள்ளதாலும், 10% விட குறைவாக உள்ளதாலும், பணியின் அவசியம் கருதி ரூ.7.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஏற்கனவே, TWIC கலந்தாலோசகர் மூலம் மாதிரிதிட்ட அறிக்கையுடன் தற்போதுள்ள நடைமுறையினை மாற்றி அமைத்து District Metering Area தனியார் கலந்தாலோசகரை உரிய வழிக்காட்டுதலின் படி நியமித்து TNUIFSL நிதி நிறுவன Project Development Grant Fund (PDGF ) or Project Preparatory Fund (PPF) மூலம் Zonation activities பணிகளை மேற்கண்ட நிதியின் கீழ் ஆற்காடு நகராட்சியில் மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அ.கு:– 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. நிர்வாக அனுமதி அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.211.00 இலட்சம் போக கூடுதலாக ஆகும் தொகை ரூ.7.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1494/2018/இ1**

**பொருள்எண். 21:-** இந்நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 2018–2019ம் ஆண்டு ரூ.40,00,000/– (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) நகர்மன்ற எண்.64, நாள்.23.03.2018 மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. பிரதி மாதம் தேவைப்படும் உணவுபொருட்களை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ள விவரத்தின் படி உணவு பொருட்கள் பெற்றுக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | பச்சை அரிசி மற்றும் புழுங்கல் அரிசி பிரதிமாதம் | 2500 கிலோ (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், ஆற்காடு). |
| 2) | மளிகைப்பொருட்கள் | மேலாளர், கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட், ஆற்காடு. |
| 3) | கேஸ் சிலிண்டர்கள் | மூர்த்தி கேஸ் ஏஜென்சி, ஆற்காடு. |
| 4) | காய்கறிகள் மற்றும் பால் | திரு.சுரேஷ், காய்காரத் தெரு, ஆற்காடு. |
| 5) | 12 நபர்களுக்க ஊதியம் | அன்னை சந்தியா மகளிர் சுய உதவிக்குழு, ஆற்காடு. |

அ.கு:– வ.எண்.1 முதல் 5 வரை உள்ள உ ணவுபொருட்களை அம்மா உணவகத்திற்கு பெற்றுக் கொள்ளவும் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1090/2015/சி2

**பொருள்எண். 22:-** இந்நகராட்சியின் கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018-2021ஆம் மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்ட தேதிகளில் நடைபெற்றது. அதன் விவரம் கீழ்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| இனம் 8 | பெ.தா.ஈஸ்வரப்பன் மாளிகைக்குப் பின்புறம் மற்றும் பாலாற்றங்கரை பகுதியில் உள்ள காலியிடத்தில் கொண்டு வந்து விற்கும் ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமை. | 07.02.2018 | பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. திரு.எம்.மீனாட்சிஅம்மாள் என்பவர் ரூ.6099/-க்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. |
| | | 28.02.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. |
| | | 07.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 14.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 21.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| இனம் 10 | பேருந்து நிலையத்திலுள்ள சைக்கிள் ஸ்டேண்டில் நிறுத்தி வைக்கும் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமை. | 07.02.2018 | 201999/-க்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது |
| | | 28.02.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 07.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 14.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 21.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| இனம் 11 | அண்ணாசாலை மார்க்கெட் எதிரில் கட்டப்பட்டுள்ள (எழில் இனிப்பகம் அருகில்) நவீன கட்டண கழிப்பிடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமை. | 07.02.2018 | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 28.02.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 07.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் |

| | | | |
|---|---|---|---|
| | | | கலந்துகொள்ளவில்லை |
| | | 14.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |
| | | 21.03.2018 | மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை |

மேற்படி 3 ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2018 முதல் 17.07.2018 முடிய உள்ள காலத்திற்கு இலாகா மூலம் வசூல் செய்யப்பட்ட விவரம் மற்றும் செலவினம் கீழ்வருமாறு உள்ளது.

| இனம் எண். | வரவினம் | செலவினம் |
|---|---|---|
| இனம் 8 | இவ்வலுவலக உத்திரவு ந.க.1924/2014/அ1, நாள் 31.03.2018 உத்திரவில் இரண்டு பணியாளர்களைக் கொண்டு பிரதி வெள்ளிக் கிழமைகள்தோறும் வசூல் செய்ய உத்திரவிடப்பட்டதில் இந்த இனம் வசூல் செய்ய சென்றபோது ஆடு மாடு கோழி விற்பனை செய்வதற்கு எவரும் வராததால் வசூல் எதுவும் இல்லை. | இரசீது புத்தகங்கள் அச்சடித்தது ரூ.8000/- |
| இனம் 10 | ரூ.17123/-<br>--------------<br>108 நாட்கள்<br>நாள் ஒன்றுக்கு 158.60<br>ஆண்டு ஒன்றுக்கு 57889/- | இரண்டு து.பணியாளர்கள்<br>26080+22879=48959/-<br>ஒரு வருடத்திற்கு<br>587508/-<br>இரசீது புத்தகம் செலவும்<br>ரூ.19000/-<br>மொத்தம் 606508/- |
| இனம் 11 | ரூ.14900/-<br>--------------<br>108 நாட்கள்<br>நாள் ஒன்றுக்கு 137.96<br>ஆண்டு ஒன்றுக்கு 50355/- | து.பணியாளர் ஊதியம்<br>29307/-<br>ஒரு வருடத்திற்கு<br>351684/-<br>இரசீது புத்தகம் செலவும் |

| | | |
|---|---|---|
| | | ரூ.19000/-<br>மொத்தம் 370684/- |

மேற்கண்ட குத்தகை இனங்களை மீளவும் 18.07.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் பின்வருமாறு பெறப்பட்டது.

| இனம் எண். | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ஆண்டு ஒன்றுக்கு |
|---|---|---|
| இனம் 8 | எம்.மீனாட்சிஅம்மாள்,<br>11,கானார் பஜனை கோவில் தெரு, ஆற்காடு. | ரூ.6000/- |
| | எம்.பாஸ்கரன்,<br>13,கானார் பஜனை கோவில் தெரு, ஆற்காடு. | ரூ.6199/- |
| இனம் 10 | எம்.மீனாட்சிஅம்மாள்,<br>11,கானார் பஜனை கோவில் தெரு, ஆற்காடு. | ரூ.140000/- |
| | எம்.பாஸ்கரன்,<br>13,கானார் பஜனை கோவில் தெரு, ஆற்காடு. | ரூ.151999/- |
| இனம் 11 | ஆர்.சந்திரசேகரன்,<br>14/54 பாலசுந்தரம் தெரு,<br>தெரு, ஆற்காடு. | ரூ.80100/- |
| | எம்.பாஸ்கரன்,<br>13,கானார் பஜனை கோவில் தெரு, ஆற்காடு. | ரூ.75000/- |

<u>அலுவலக குறிப்பு:-</u>

| | |
|---|---|
| (1) | இனம் 8க்கு 01.04.2018 முதல் 17.07.2018 வரை துறை மூலம் எவ்வித வசூலும் இல்லாத நிலையில் ஒப்பந்தப்புள்ளியில் ரூ.6199/- என திரு.எம்.பாஸ்கரன் என்பவர் கோரியுள்ளார். கடந்த ஆண்டு இந்த இனம் ரூ.16758/-க்கு ஏலம் உறுதி செய்யப்பட்டது. கடந்த மூன்றாண்டு சராசரி ரூ.15972/- இந்நிலையில் இந்த இனம் துறை மூலம் வசூல் செய்ததில் வசூல் ஏதுமில்லை. தற்பொழுது சென்ற நிதியாண்டில் சென்ற தொகைக்கு ரூ.10559/- குறைவாக உள்ளது. இந்த நிதியாண்டில் நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மீதமுள்ள எட்டு மாதங்களுக்கு வருவாய் ரூ.6199/- |

| | |
|---|---|
| | ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்டுள்ளதால் வருவாய் இழப்பு ஏதுமில்லாமல் ரூ.6199/- வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கேட்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு இந்த இனத்தினை திரு.எம்.பாஸ்கரன் என்பவருக்கு குத்தகையினை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். இந்த இனத்தினை 01.08.2018 முதல் 31.03.2019 முடியவும், அடுத்து வரும் 2019-2020 மற்றும் 2020-2021ம் ஆண்டுகளுக்கு 5% குத்தகை கேட்பு உயர்வு செய்து வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| (2) | இனம் 10க்கு 01.04.2018 முதல் 17.07.2018 வரை துறை மூலம் ரூ.17123/- வசூலிக்கப்பட்டது. 18.07.2018ந்தேதிய ஒப்பந்தப்புள்ளியில் ரூ.151999/- என திரு.எம்.பாஸ்கரன் என்பவர் கோரியுள்ளார். கடந்த ஆண்டு இந்த இனம் ரூ.453128/-க்கு ஏலம் உறுதி செய்யப்பட்டது. கடந்த மூன்றாண்டு சராசரி ரூ.431892/- இந்நிலையில் இந்த இனம் துறை மூலம் வசூல் செய்ததில் ரூ.17123/-. தற்பொழுது சென்ற நிதியாண்டில் சென்ற தொகைக்கு ரூ.301129/- குறைவாக உள்ளது. மாதம் ஒன்றுக்கு ரூ.4760/- மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.57120/- வசூலாகும் என கருதப்படுகிறது. எனவே, ரூ.151999/- என ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறைவாக இருப்பினும் ஏற்கலாம். இந்த நிதியாண்டில் நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மீதமுள்ள எட்டு மாதங்களுக்கு வருவாய் ரூ.151999/- ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்டுள்ளதால் வருவாய் இழப்பு ஏதுமில்லாமல் ரூ.151999/- வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கேட்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு இந்த இனத்தினை நகரமன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்படைக்கலாம். மேலும், நகராட்சி சைக்கிள் நிறுத்தும் இடத்திற்கு சுற்றிலும் தெற்கு புறமாக எம்எஸ்ஆர் சைக்கிள் நிறுத்து இடமும், கிழக்கு புறமாக எம்எஸ் சைக்கிள் நிறுத்துமிடமும், வடக்கு புறமாக தமிழ்நாடு துணிக்கடை எதிரில் உள்ளதையும், வடக்கு புறமாக கண்ணன் ஸ்வீட் கடை பின்புறமும், செய்யாறு பை-பாஸ் அருகில் பெட்ரோல் பங்க் அருகில் சைக்கிள் ஸ்டேண்ட் உள்ளதால் பேருந்து நிலையத்திற்குள் உள்ள நகராட்சி சைக்கிள் ஸ்டேண்டிற்கு வரும் வாகனங்கள் குறைந்துவிட்டது. எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.151999/- கொடுத்துள்ள திரு.எம்.பாஸ்கரன் என்பவருக்கு குத்தகையினை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். இந்த இனத்தினை 01.08.2018 முதல் 31.03.2019 முடியவும், அடுத்து வரும் 2019-2020 மற்றும் 2020-2021ம் ஆண்டுகளுக்கு 5% குத்தகை கேட்பு உயர்வு செய்து வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| (3) | இனம் 11க்கு 01.04.2018 முதல் 17.07.2018 வரை துறை மூலம் ரு.14900/- வசூலிக்கப்பட்டது. 18.07.2018ந்தேதிய ஒப்பந்தப்புள்ளியில் ரு.80100/- என திரு.ஆர்.சந்திரசேகரன் என்பவர் கோரியுள்ளார். கடந்த ஆண்டு இந்த இனம் ரு.186102/-க்கு ஏலம் உறுதி செய்யப்பட்டது. மாதம் ஒன்றுக்கு ரு.4138/- மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரு.49656/- வசூலாகும் என கருதப்படுகிறது.கடந்த மூன்றாண்டு சராசரி ரு.177381/- இந்நிலையில் இந்த இனம் துறை மூலம் வசூல் செய்ததில் ரு.14900/-. தற்பொழுது சென்ற நிதியாண்டில் சென்ற தொகைக்கு ரு.106002/- குறைவாக உள்ளது. இந்த நிதியாண்டில் நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மீதமுள்ள எட்டு மாதங்களுக்கு வருவாய் ரு.80100/- ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்டுள்ளதால் வருவாய் இழப்பு ஏதுமில்லாமல் ரு.80100/- வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கேட்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு இந்த இனத்தினை நகரமன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்படைக்கலாம். மேலும், நகராட்சி கட்டண கழிப்பிடத்திற்கு (எழில் இனிப்பகம் பின்புறம்) அருகாமையில் மார்க்கெட் பகுதியில் இலவச கழிப்பிடம் செயல்பட்டு வருவதால் கட்டண கழிப்பிடத்திற்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரு.80100/- கொடுத்துள்ள திரு.ஆர்.சந்திரசேகரன் என்பவருக்கு குத்தகையினை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். இந்த இனத்தினை 01.08.2018 முதல் 31.03.2019 முடியவும், அடுத்து வரும் 2019-2020 மற்றும் 2020-2021ம் ஆண்டுகளுக்கு 5% குத்தகை கேட்பு உயர்வு செய்து வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1924/2014/அ1) |

**பொருள்எண். 23:-** இந்நகர்மன்ற தீர்மான எண்.41, நாள்.28.02.2018ல் அனுமதிக்கப்பட்டதினை தொடர்ந்து Xerox Machine பழுது பார்த்தல் பணிக்க விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) Gem Systems, Vellore - 9,600/-
2) Newra Systemes, Vellore - 11,000/-
3) Infres Methodex Pvt Ltd, - 10,900/-

**அ.கு:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Gen Systems, Vellore என்பவருக்க வேலை உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 24:- 2018** கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு நகராட்சி மூலம் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளில் சட்டத்திற்கு புறம்பாக மின்மோட்டார் பொருத்தி குடிநீர் உறிஞ்சுவது கண்டறியப்பட்டால் இணைப்பு துண்டிப்பு செய்யப்படும் என்ற அறிவிப்பினை தினகரன் நாளிதழில் **09.05.2018**ல் விளம்பரம் வெளியிட்டதற்கு Kal Publications (P) Ltd-க்கு வழங்க வேண்டிய பில் தொகை ரூ.7308/—க்கு (ஏழாயிரத்து முன்னூற்று எட்டு ரூபாய் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 25:-** ஆற்காடு நகராட்சியில் குடிநீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் Twic நிறுவனத்திற்கு குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து தர ரூ.30,71,080/– + சர்வீஸ் வரி (12.36%)முதலியவற்றை உடன் தொகை வழங்க முடிவுசெய்யப்பட்டது. பிறகு 27.03.2014 அன்ற நடைபெற்ற துணை குழு அறிக்கையின்படி மேற்படி தொகையை ஆற்காடு நகராட்சியே வழங்க முடிவு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.30630/2013/ws1 நாள்.09.04.2014ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்துவதற்கு Twic நிறுவனத்திற்கு தற்போது வரை ரூ.30,70,400/–க்கான தொகை வழங்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை DPR தயாரித்ததற்கான மொத்த தொகை ரூ.30,71,080/– + ரூ.3,79,585/– (12.36 S.Tax) = ரூ.34,50,665/–ல் மீதம் Twic நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய தொகை ரூ.3,80,265/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 26:-** தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் கடிதம் எண்.019/M(P)TNMSC/INSECT/2014, DATE 19.01.2018 நாளிட்ட கடிதத்தில் Perthrum (India) PVt. Ltd No.64/11, Rajabath Street, T. Nagar, Chennai 600 017 என்ற நிறுவனத்தின் மூலம் Fenthiioni 82.5% கொசு மருந்து வாங்கி கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் காசுக்களை கட்டுப்படு.த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி Fenthiioni 82.5% கொசு மருந்து 100 லிட்டர் வாங்க தோராய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றப்பொருள் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் மற்றும் மழைக்காலம் கருதி கொசுக்களை கட்டுபடுத்த தமிழ்நாடு மருருததுவ சேவை கழகம் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் மூலம் Fenthiioni 82.5% கொசு மருந்து 100 லிட்டர் வாங்க மன்றப்பொருளில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்கண்ட செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1709/2015/எச்1

**பொருள்எண். 27:-** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் தினசரி மக்கள் கூடும் இடங்கள் பொது கழிப்பிடங்கள், குப்பை சேகரிக்கும் இடங்களில் தொற்றுநோய் பரவுதை தடுக்க பயன்படுத்தப்படும் சுண்ணாம்பு தூள் இருப்பு குறைவாக உள்ளதினால் 2 (இரண்டு டன்) சுண்ணாம்பு வாங்கி கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.20000/–க்கு மன்ற அனுதிக்க வைக்கப்படுகின்றது.

அ.கு:– 1) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 28:-** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் Hand Fogging இயந்திரம் 7 எண்ணிக்கையில் 5 எண்ணிக்கை பழுது அடைந்துள்ளதினால் சரிசெய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.15000/–க்கு மன்றம் அனுமதி வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிபாதிக்காமல் இருக்க உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 29:-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகரில் உள்ள 30 வார்டுகளில் சேகமாகும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்கும் பணிக்கு இ.எம்.ஐ செலுசன் 500 லிட்டர் வாங்க நகர மன்ற தீர்மானம் 09.06.2018ம் நாளில் முன் தொகை ரூ.4.75 இலட்சத்திற்குஅனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே,06.07.2018ம் நாளில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் கீழ் காணும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | தொகை . ரூ. |
|---|---|---|
| 1. | Thirumurugan traders, Namakkal | 949.00 |
| 2. | Sri Plasto tec, chennai | 1100.00 |

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) ஒப்புநோக்கு பட்டியலில் கண்டுள்ளவாறு வ.எண்.1 Thirumurugan traders, Namakkal என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை ஏற்று இ.எம்.ஐ செலுசன் 500 லிட்டர் சப்ளை செய்வதற்கான உத்திரவு வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கும், செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2167/2018/எச்1

**பொருள் எண். 30:-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகரில் ஈக்கள் மற்றும் கரப்பான் பூச்சிகளை கட்டுப்படுத்த வேண்டி ரெடி மிக்ஸ் ஆயில் 600 லிட்டர் வாங்க நகர மன்ற தீமானம் 09.06.2018ம் நாளில் தொகை ரூ.4.20 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே,06.07.2018ம் நாளில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் கீழ் காணும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Thirumurugan traders, Namakkal | 699.00 |
| 2. | Sri Plasto tec, chennai | 820.00 |

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) ஒப்புநோக்கு பட்டியலில் கண்டுள்ளவாறு வ.எண்.1 Thirumurugan traders, Namakkal என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை ஏற்று ரெடி மிக்ஸ் ஆயில் 600 லிட்டர் சப்ளை செய்வதற்கான உத்திரவு வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கும், செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2167/2018/எச்1

**பொருள் எண். 31:-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகரில் உள்ள பேருந்து நிலையம், மார்கெட் அம்மா உணவகம் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் உருவாகும் துர்நாற்றம் போக்க கிருமி நாசினி மற்றும் தொற்று நோய் தடுக்கும் வகையில் லெமன் கிராஸ் ஆயில் 150 லிட்டர் வாங்க நகர மன்ற தீர்மானம் 09.06.2018ம் நாளில் தொகை ரூ.4.20 இலட்சத்திற்குஅனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, 06.07.2018ம் நாளில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் கீழ் காணும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | Thirumurugan traders, Namakkal | 2799.00 |
| 2. | Sri Plasto tec, chennai | 2950.00 |

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) ஒப்புநோக்கு பட்டியலில் கண்டுள்ளவாறு வ.எண்.1 Thirumurugan traders, Namakkal என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை ஏற்று லெமன் கிராஸ் ஆயில் 150 லிட்டர் சப்ளை செய்வதற்கான உத்திரவு வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கும், செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2167/2018/எச்1

**பொருள் எண். 32:-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்களிடையே கழிவறை பயன்படுத்துவதை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த 4க்கு 6 அளவில் பேனர் தயார் செய்ய ரூ.12000/–க்கு மன்றப்பொருள் எண்.081/நாள்.28.03.2018ம் நாளில் ஒப்புதல் பெறப்பட்டது. விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை ஒப்புநோக்க பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | B.HAYATHIBEE, ARCOT | 2800.00 |
| 2. | K. KUMAR, ARCOT | 3200.00 |
| 3 | N. EZHILAN CONTRACTOR, ARCOT | 3600.00 |

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு பேனர்கள் செய்ய ஒப்புநோக்கு பட்டியலில் காணும் வ.எண்.1ல் உள்ள B.HAYATHIBEE, ARCOT என்பவர் குறைந்த விலைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளதால் இதனை ஏற்று அவசர அவசியம் கருதி சப்ளை செய்ய தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அளித்துள்ளமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதியல் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1112/2018/எச்1

**பொருள்எண். 33:-** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் TN73D 7584 டிம்பர் பிளேசர் வாகனத்தில் உள்ள பழுதுகளை நிவர்த்தி செய்ய உள்ளூர் பழுதுகளை நிவர்த்தி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விலைப்புள்ளிக. வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | எஸ்.ராஜேஷ்குமார், எண்.73, மேனேஜர் தெரு, ஆற்காடு | 27,000/- |
| 2. | ஸ்ரீ கலைமகள் பாடி பில்டர்ஸ், 215, பைபாஸ் ரோடு, ஆற்கழடு | 27,500/- |

அ.கு :– **1)** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள எஸ்.ராஜேஷ்குமார், எண்.73, மேனேஜர் தெரு, ஆற்காடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளி அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்க ஏற்று உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 34:-** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயனபடுத்தப்படும் TN73D 5784 பின் லாரியின் பீன் தூக்கும் இயந்திரம் (ஹைட்ராலிக் பழுது அடைந்து ஆயில் கசிவு ஏற்படுவதினால் இதை சரிசெய்ய ஆகும் தோராய செலவு ரூ.27000/–க்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அ.கு :– **1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**2)** அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப் பணிகள் பாாதக்காமல் இருக்க உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 35:-** இந்நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் 01.10.2018 முதல் தொழில்வரி உயர் செய்ய நகரமன்ற தீர்மான எண்.128, நாள்.18.06.2018ல் அனுமதிக்கப்பட்டதி படி, தொழில்வரி உயர்வு செய்யப்பட்ட விவரத்தினை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக தினத்தந்தி நாளிதழில் 07.07.2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. பொது மக்களிடமிருந்து கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள் கோர கால அவகாசம் 20 நாட்கள் முடிவுற்ற நிலையில் பொது மக்களிடமிருந்து எந்தவித கருத்துரைகள், ஆலோசனைகள், ஆட்சேபனைகள் எதுவும் நகராட்சி அலுவலகத்தில் பெறப்படவில்லை. எனவே, நகரமன்றம் தீர்மானத்தின் படி தொழில்வரியினை கீழ்கண்டவாறு உயர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **அரையாண்டு வருமானம்** | **ஏற்கனவே 01.01.2013ல் முதல் உள்ள அரையாண்டு தொழில் வரி** | **01.10.2018 முதல் திருத்திய அரையாண்டு தொழில்வரி (25 சதவீதம் உயர்வு)** |
|---|---|---|---|
| 1 | ரூ. 21000/– வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21000/– முதல் ரூ.30000/– வரை | ரூ.118/– | ரூ.148/– |
| 3 | ரூ.30001/– முதல் ரூ.45000/– வரை | ரூ.298/– | ரூ.373/– |

| | | | |
|---|---|---|---|
| 4 | ரூ.45001/– முதல் 60000/– வரை | ரூ.586/– | ரூ.733/– |
| 5 | ரூ.60001/– முதல் 75000/– வரை | ரூ.883/– | ரூ.1104/– |
| 6 | ரூ. 75001/–க்கு மேல் | ரூ.1173/– | ரூ.1250/– |

அ.கு :– 1) மன்றப்பொருளில் கலம் 3ல் உள்ள தொழில்வரி 25% உயர்வு செய்து 01.10.2018 முதல் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2) உயர்வு செய்யப்பட்ட தொழில்வரி கேட்பினை மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்து 01.10.2018 முதல் நடைமுறைப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1796/2018/அ1

**பொருள்எண். 36:-** ஆற்காடு நகராட்சிக்கு 2018–19ம் ஆண்டுக்கு தேவைப்படும் பதிவேடுகள், படிவங்கள், எழுதுபொருட்கள், கணினி சம்பந்தமான உதிரிகள், பிரிண்டர் டோனர் போன்றவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் NAPCO நிறுவனம் அல்லது அவர்களின் டீலர்களிடமிருந்து நேரடியாக வாங்க தேவைப்படும் தோராய செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு :– அலுவலக செயல்பாடுகள் தடையின்றி சிறப்பாக நடைபெற மேற்கண்ட அவசியமான எழுதுபொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.1634/2018/பி2

**பொருள்எண். 37:-** இந்நகராட்சியின் 2014–2015 மற்றும் 2015–2016ம் ஆண்டுகளுக்கான செலுத்த வேண்டிய தணிக்கை கட்டணம் உரிய அரசு தலைப்பில் செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எ.219/அ2/2018, நாள்.27.03.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டு தணிக்கை முடிவுற்றுள்ளதால் அதற்கான தணிக்கைக் கட்டணங்கள் கீழ் வருமாறு.

2014–2015 – ரூ.69,208/–

2015–2016 – ரூ.66,331/–

மேலும் 2016–2017ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை 05.07.2018 அன்று வருாய் மற்றும் மூலதன நிதி தணிக்கைக்கு செலுத்தவேண்டிய தணிக்கை கட்டணம் தணிக்கை தடை பத்தி எண்.52ல் ரூ.59,914/–ஐ செலுத்துமாறு தணிக்கை தடை எழுப்பப்படுள்ளது.

எனவே, தணிக்கைக் கட்டணம் ரூ.1,95,453/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– 1) 2014–2015ஆம் ஆண்டுக்கான செலுத்த வேண்டிய தணிக்கைக் கட்டணம் ரூ.69,208/–ஐ 25.07.2018ல் செலுத்தமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) 2015–16 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கைக் கட்டணம் முறையே ரூ.66,331/– மற்றும் ரூ. 59,914/–உரிய அரசு தலைப்பில் செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

3) தணிக்கைக்கு கட்டணம் ரூ.69,208/– ரூ.66,331/– (ம) ரூ.59,914/– ஆக மொத்தம் ரூ.1,95,453/–ஐ தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.124/2018/அ3

**பொருள் எண். 38:-** இந்நகராட்சியில் 2016–2017ம் நிதியாண்டில் ஆண்டு கணக்குகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, வேலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை,வேலூர் – 1 அவர்களின் கடித ந.க.எண். 399/அ2/2018(உ.நி.த) நாள்.26.06.2018 கடிதத்தில் 2016–2017–ம் நிதியாண்டு கணக்குகளின் – வருவாய் (ம) மூலதன நிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவைகள் குறைகள் உள்ளதாக தெரிவித்து குறைகளை நிவர்த்தி செய்து ஆண்டு கணக்குகளை முழுமையாக ஒத்திசைவு செய்து அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016–2017ம் ஆண்டு வருவாய் (ம) மூலதன நிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய கணக்குகள் அனைத்தும் குறைகள் நிவர்த்தி செய்ய பட்டைய கணக்காயர் மூலம் (Charted Account) கணக்குகள் ஒத்திசைவு செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை,வேலூர் அவர்களுக்கு சமர்ப்பிக்க பட்டைய கணக்காயருக்கு செலவினம் ரூ.40,000/–க்கு (நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1) 2016–2017ம் ஆண்டு வருவாய் (ம) மூலதன நிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய கணக்குகள் அனைத்தும் குறைகள் நிவர்த்தி செய்ய பட்டைய கணக்காயர் மூலம் கணக்குகள் முடிக்கவேண்டியுள்ளதால் ரூ.40,000/– மன்றம் அனுமதிக்கலாம்.

2) இச்செலவினம் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1260/2017 / பி1

**பொருள் எண். 39:-** இந்நகராட்சியில் பொது சொத்துவரி திருத்தம் 01.04.2018 முதல் நடைமுறைப்படுத்த அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீளவும் அரசாணையில் திருத்தம் செய்து அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணைகளின்படி நகராட்சியில் 01.04.2018 முதல் பொது சொத்துவரி திருத்தம் (Qainquennial Revision of Property Tax) செய்ய மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அ.கு:–</u> பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2317/2018/அ1)

**பொருள் எண். 40:-** மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ2/1017/2017 நாள்.25.07.2018–ன் படி கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

1) ஆற்காடு நகராட்சி 27வது வார்டு காந்தி நகர் காலனியில் பூங்கா அமைத்தல் பணி. ரூ.7.00 இலட்சம்.

<u>அ.கு:–</u> 1) மன்றம் பதிவுசெய்யலாம்.
2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஆற்காடு**
**நாள்: 27 .07.2018**

**தனி அலுவலர்,**
**ஆற்காடு நகராட்சி.**